# இயேசு யார்?

## பாடம் - 4

## ஜெபமும் வேதவாசிப்பும்

**கிறிஸ்துவில்** புதிய வாழ்க்கை துவங்கிய ஒவ்வொருவரும், அவருக்குள் நிலைத்திருக்கும் வாழ்க்கை வாழ்வதற்கு அத்தியாவசியமானது ஜெபமும் வேதவாசிப்புமாகும்.

ஜெபம் என்றால் என்ன?

ஜெபம் என்பது நாம் நமது தந்தையும். கடவுளுமாகிய தேவனிடம் பேசும் அனுபவமாகும்.

இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவனாகி, அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளையாகும்படி இயேசு அதிகாரமளித்துள்ளார். இப்படி தேவனுடைய பிள்ளைகளாகிவிட்ட நாம், நமது பரம தந்தையிடம் பேசும் அனுபவமே ஜெபம் ஆகும்.

**நாம் ஜெபிப்பதை (தேவனுடன் பேசுவதை) அவர் விரும்புகிறாரா?**

ஆம், தேவன் நாம் அவருடன் பேசவேண்டுமென்று விரும்புகிறார். அவருடன் பேசவேண்டுமென்று பல வழிகளில் உணர்த்தியும், கட்டளையிட்டுமிருக்கிறார்.

**ஜெபிக்கத் தெரியாதவர்கள் எப்படி ஜெபிக்க முடியும்?**

ஒரு 2 வயதுக் குழந்தை தன் தந்தையிடம் தனக்குத் தேவையானதை அரைகுறை வார்த்தையோடு பேசி கையைக் காட்டும். ஒரு 20 வயது வாலிபன் தன் தந்தையிடம் மரியாதையுடன், அவருடைய மனநிலை அறிந்து, தான் கேட்பது அவருக்குப் பிரியமானதுதானா என்பதை நிதானித்து, உரிய நேரத்தில் கேட்பான். 2 வயது பிள்ளையும் 20 வயது மகனும் பேசுபவற்றில் வித்தியாசமுண்டு. இருப்பினும் இருவருமே தந்தைக்குப் பிரியமான பிள்ளைகளாதலால், இருவரும் தன்னிடம் பேசுவதை தந்தை விரும்புவார். அதுமட்டுமல்லாமல் இருவருடைய தேவைகளையுமே தந்தை உணர்ந்து அவற்றை நிறைவேற்றி வைப்பார். தந்தையிடம் எப்படிப் பேசுவதென்று யாரும் தனியாகக் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. சிறுவயதில் அப்பாவிடம் எப்போது எப்படிப் பேசவேண்டுமென்று நமக்குத் தெரியாதிருந்தது. வளர வளர அப்பாவுக்கு எப்படி மரியாதை கொடுத்துப் பேசுவது, அவருடைய மனநிலை எப்படியிருக்கும்போது என்ன கேட்க வேண்டும், நாம் கேட்பவைகள் தந்தைக்குப் பிடிக்குமா பிடிக்காதா என்பதையெல்லாம் அறிந்து பேசுகிறோம். அதுபோலவே ஆவிக்குரிய வாழ்வில் நாம் வளர வளர முறையாக ஜெபிக்கக் கற்றுக்கொள்வதுடன், தேவனுக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதையெல்லாம் உணர்ந்து ஜெபிக்கிறோம்.

நமது பரம பிதாவாகிய தேவன் முறைப்படி ஜெபிக்கத் தெரியாத புதிய விசுவாசியின் ஜெபம், ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற்றவர்கள் ஜெபிக்கும் முறையான ஜெபம் ஆகிய இரண்டையுமே விரும்புகிறார், கிருபையுடன் பதிலளிக்கிறார். எனவே நன்றாகக் கற்றுக்கொண்டபின்தான் ஜெபிப்பேன் என்று யாரும் ஜெபிக்காமல் இருக்கவேண்டியதில்லை.

நமது தேவன் எல்லா மனிதனுடைய நினைவுகளையும், செயல்களையும் எப்போதும் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களின் ஒவ்வொரு வார்த்தையையும் அவர்களுடைய இருதயத்தில் இருக்கும்போதே அவர் கவனித்துவிடுகிறார். எனவே நமது வாயில் பிறக்கும் **வார்த்தைகளைவிட இருதயத்தில் இருப்பதையே அவர் பார்த்து பதிலளிக்கிறார்.** தேவனைநோக்கி, "அப்பா பிதாவே, " என்று தொடங்கி நாம் நமது தாய் மொழியில் என்னவெல்லாம் கேட்க நினைக்கிறோமோ அதையெல்லாம் எந்த இடத்தில் இருந்துகொண்டும் கேட்கலாம். நம்மைப் படைத்த தேவன் படைக்கப்பட்ட எதனோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதவராகையால், ஏதேனும் ஒரு விக்கிரகத்திற்கு முன்பாக நின்று ஜெபிக்க வேண்டிய அவசியமுமில்லை, தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக அப்படிச் செய்து அவருடைய சாபத்தை நாம் பெறவேண்டியதுமில்லை.

**ஜெபிக்கும்போது கண்களை மூடிக்கொள்வதால் நம்மைச் சுற்றியிருப்பவற்றைப் பார்க்காமல் இருதயத்தை தேவனுக்கு நேராக ஒருமுகப்படுத்த முடிகிறது. நாம் கைகளைக் கூப்பிக்கொள்வதை மற்றவர்கள் காணும்போது, அவர்களும் நம்மை வேடிக்கை பார்க்காமல் பயபக்தியோடு தேவனைத் தொழுதுகொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறோம்.**

## எப்போது, எங்கு ஜெபிக்க வேண்டும்?

ஜெபம் பண்ணுவதற்கென்று தனிப்பட்ட நேரமோ இடமோ அவசியமானதல்ல.

நம் வாழ்க்கை முழுவதும் எந்த இடத்திலும், எந்த வேலை செய்துகொண்டும் ஜெபிக்கலாம்.

மிகவும் வயிறு பசிக்கும்போது வேலைசெய்துகொண்டோ, நின்றுகொண்டோ நடந்துகொண்டோ, கிடைக்கும் உணவினை சாப்பிட்டுவிடுகிறோம். ஆனாலும் பொதுவாக சாப்பிடுவதற்கென்று மூன்று வேளையும், அதற்கேற்ற இடமும் நமக்கு உண்டு. அதுபோலவே, அவசியம் ஏற்படும்போது எந்த இடத்திலும், எந்த வேளையிலும் ஜெபிக்கலாம். ஆனாலும் குறைந்தபட்சம் நமது படுக்கை அறையில் காலை எழுந்ததும் ஜெபித்துவிட்டு வேதம் வாசிப்பதும், இரவில் வேதம் வாசித்துவிட்டு ஜெபிப்பதும் முறையான பழக்கங்களாகும்.

ஒரு மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் தங்கள் குறைகளைத் தெரிவித்து மனு எழுதத் தெரியாதவர்களும் மற்றவர்கள் எழுதிய மனுவை வாசித்துப் பார்த்து அதில் கையெழுத்திட்டால் அவர்களும் அதை எழுதியவர்களாகிறார்கள். அதுபோல ஜெபிக்கத் தெரியாதவர்களும் ஜெபிக்கத் தெரிந்த மற்றவர்களோடு சேர்ந்து ஜெபிக்கலாம். ஒருவர் ஜெபவாக்கியங்களைச் சொல்லி ஜெபிக்கும்போது மற்றவர்கள் அதைக் கவனமாகக் கேட்டு இறுதியாக மற்றவர்கள் “ஆமென்” என்று சொன்னால், யாவரும் சேர்ந்து அந்த ஜெபத்தைச் செய்ததாக ஆகிறது. ஆமென் என்றால் “அப்படியே ஆவதாக” என்று பொருள்.

பொதுவாக ஒரு விசுவாசியின் தினசரி ஜெபம் கீழ்க்கண்டவாறு இருப்பது நல்லது.

1. நாம் கடவுளின் பிள்ளை என்று நினைவுகூர்ந்து, தேவனை பிதாவே என்று அன்புடன் அழைக்கும் பாச உணர்வு.

2. கடவுளின் பரிசுத்த நாமத்தை வாழ்த்தி, அவருடைய ஆட்சியை விரும்பி வரவேற்பது.

3. தினசரி உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளைக் கேட்டல்.

4. தினசரி நமக்கு விரோதமாய் குற்றம் செய்கிறவர்களை நாம் மன்னித்து, அதைப்போலவே நமது குற்றங்களையும் தேவன் மன்னிக்கும்படி கேட்பது.

5. அன்றாட வாழ்வில் பாவம் செய்துவிடாதபடியும், தீயவைகள் நேரிடாதவாறும் நம்மைக்காக்க வேண்டுவது.

6. இறுதியாக, சகல துதியும், மகிமையும், கனமும், நித்திய தேவனாகிய அவருக்கே செலுத்துவது.

இந்த ஆறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஜெபத்தை இயேசு தமது சீசர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இன்றும் நமக்கு முன்மாதிரியானதும், ஆலயங்களில் பயன்படுத்தப்படுவதுமான கர்த்தருடைய ஜெபமே அது. புதிதாகப் பிறந்த நீங்களும் இதைக் கற்றுக்கொண்டு, ஆரம்ப நாட்களில் பயன்படுத்துங்கள். குழந்தையானது முதலில் நாம் சொல்லிக்கொடுக்கும் வார்த்தைகளை மட்டும் பேசக் கற்றுக்கொள்ளும். பின்னர் அது தானாகப் பேசக் கற்றுக்கொள்ளும். அதுபோலவே ஆரம்ப நிலைகளில் இந்த ஜெபத்தை மனப்பாடமாகக் கற்று, அதை ஜெபிக்கத்துவங்கி, பின்னாட்களில் ஆவியில் வளர வளர நாம் சொந்தமாக ஜெபிக்கத் துவங்க வேண்டும்.

### இயேசு கற்பித்த முன்மாதிரி ஜெபம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று ரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

விசுவாசத்தில் அதிகமதிகமாய் வளரும்போது, மேற்சொல்லிய ஜெபத்தில் தேவனைப் புகழ்ந்து வாழ்த்தும் பகுதி அதிகமாகவும், நமது தேவைகளுக்காக வேண்டும் பகுதிகள் குறைந்துகொண்டும் வரும். மேலும் மற்றவர்களுக்காகவும், தனது குடும்பத்தினருக்காகவும் வேண்டுதல் செய்யும் பகுதிகளும் அதிகமாகிக்கொண்டேபோகும். ஆபத்து வேளைகளில் பொருத்தனை செய்து வேண்டுவது, கண்ணீருடன் ஒரே பொருளுக்காக ஜெபித்து அதைப்

பெற்றுக்கொள்வது, சில சோதனைகளை வெல்ல சிறப்பு வல்லமைக்காகப்

போராடி ஜெபித்தல், போன்ற உன்னத ஜெப அனுபவங்களும், ஜெபநேரங்களும் அதிகமாகிக்கொண்டேயிருக்கும். அதிகமாக ஆவியில் நீங்கள் வளரும்போது ஜெபமில்லாத வாழ்க்கை ஒன்றுமில்லாதது என்றும், ஜெபமே ஜெயம் என்றும் உணரத்துவங்குவீர்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் அநேக பக்தர்களின் விசேஷித்த ஜெபங்கள் உண்டு. அவற்றை வாசித்து, அவர்களைப்போல ஜெபிக்க வேண்டும் என்று நாம் தியானித்தும் நமது ஜெப வாழ்க்கையில் வளர முடியும்.

பொதுவாக ஜெபத்தின் அவசியத்தையும், பயன்களையும் (சிலவற்றை மட்டும்) கீழ்க்கண்டவாறு கூறலாம். இதில் சொல்லப்படாத அநேக பயன்களை நீங்கள் தியானித்து, அனுபவித்து உணருங்கள்.

## ஜெபத்தின் அவசியமும் பயன்களும் -

1. ஜெபத்தின் மூலம் நாம் தினம் தினம் தேவனோடு பேசி ஐக்கியமாவதால், அவருடைய பரிசுத்தமும், அவருடைய வல்லமையினால் கிடைக்கும் தைரியத்தையும் பெற்று ஆவிக்குரிய வாழ்வில் பலமடைகிறோம்.

2. தினசரி நாம் பாவத்தில் விழுந்துவிடாதபடி ஆபத்து மோசங்களில் அகப்படாமல் காக்கப்படுகிறோம்.

3. குறிப்பிட்டுக் கேட்டுப் பெற்றுக்கொள்ள விரும்பும் எந்தக் காரியத்தையும் தேவனுடைய தீர்மானத்தின்படியே பெற்றுக்கொள்கிறோம்.

4. வெற்றியான வாழ்கை வாழவும், நமக்கு விரோதமாய் உக்கிரக பலத்தோடு போராடும் சாத்தானின் வல்லமைகளை முறியடிக்கவும் தேவ வல்லமையைப் பெற்றுக்கொள்கிறோம்.

5. ஜெபமே நம்மை மிகுந்த தியானத்துக்குள்ளும், ஆலோசனைக்குள்ளும் வழிநடத்தி, விசுவாசத்தினால் வருகிற மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

## சில சமயங்களில் நமது ஜெபங்கள் கேட்கப்படாதது ஏன்?

சில சமயங்களில் பலமுறை ஜெபித்தும் நாம் பெற்றுக்கொள்ளாத நமது விருப்பங்களும் உண்டு. பல விசுவாசிகள் கேட்டது கிடைக்காததால் சோர்ந்துபோய், தேவன்மீது கோபமடைகிறார்கள்.

மூன்று வயதுக் குர்ந்தை அழகான கைப்பிடியுள்ள கூர்மையான கத்தியை விளையாடுவதற்காகக் கேட்கிறது. 20 வயது வாலிபன் 150 மைல் வேகத்தில் செல்லக்கூடிய மோட்டார்பைக் கேட்கிறான். பொறுப்புள்ள ஒரு தந்தை மேற்படி இரண்டையுமே வாங்கித் தரமாட்டார். ஏனெனில் இவ்விரண்டுமே பிள்ளைகளுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது. பிள்ளைகள் அதற்காக தந்தையைக் கோபித்தாலும் அவர் பொறுத்துக்கொள்வார். அதேபோல நாம் கேட்கும் காரியங்கள் மிகவும் நல்லதாக நமக்குத் தோன்றினாலும், சர்வ ஞானமுள்ளவராகிய தேவன், நம்மை அவரைவிட்டுப் பிரித்திடும் எந்தக் காரியத்தையும், நமக்குக் கேடுவிளைவிக்கும் காரியத்தையும் நமக்குத் தரமாட்டார். அப்படி நாம் மீண்டும் மீண்டும் கேட்பதால் அவர் தந்தால் அதன் தீமைகளை பின்னர் உணர்வோம்.தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை மனிதர்கள் தங்கள் சுய இச்சைகளினால் கேட்டு அனுபவிக்க விரும்பும்போதும் அவர் அவைகளைத் தருவதில்லை. இருதயத்தில் அக்கிரம சிந்தைகளுடன் பாவியாகிய ஒருவன் கேட்கும் எதுவும் கிடைக்காது.

## பரிசுத்த வேதாகமம்

பரிசுத்த வேதாகமம் என்பது மனிதர்கள் தேவனை அறிந்துகொள்ளும்பொருட்டும் தேவன் மனிதனோடு பேசும் பொருட்டும், தமது ஆவியானவரைக்கொண்டு தேவன் மனிதனுக்கு வழங்கிய அன்புப் பரிசாகும்.

பரிசுத்த வேதாகமத்தில் என்ன உள்ளது?

பரிசுத்த வேதாகமத்தில் சரித்திரம், தியானம், அறிவுரை, நற்செய்தி, தீர்க்கத்தரிசனநகள் அடங்கிய 66 புத்தகநகள் உள்ளன. இதன் முதல் 39 புத்தகங்கள் பழைய ஏற்பாடு என்றும். அடுத்துள்ள 27 புத்தக1கள் புதிய ஏற்பாடு என்றும் அழைக்கப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு வரையிலுள்ள மனித வரலாறு, தீர்க்கத்தரிசனங்கள், தியானங்கள், தேவனைத் துதிக்கும் துதிகள், ஞான ஆகமங்கள் ஆகியவை உள்ளது.

புதிய ஏற்பாட்டில் இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறும், சபையின் வரலாறு, பரிசுத்தவான்களின் மூலம் தேவன் எழுதிய கடிதங்கள், இயேசுவின் இரண்டாம் வருகையைக்குறித்த (விரைவில் நடைபெறப்போவது) தரிசனம் ஆகியவை உள்ளது. வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் ஒரு முழுமையான செய்தியைக்கொண்டுள்ளது. ஒவ்வொரு புத்தகமும். ஒவ்வொரு வார்த்தையும் மற்றப் புத்தகங்களோடும் வார்த்தைகளோடும் தொடர்பு உடையது. அதில் முரண்பாடுகளே இல்லை.

முழு வேதாகமத்தின் ஒட்டுமொத்த செய்தி என்னவென்றால், நாம் கர்த்தரும் இரட்சகரும் தேவகுமாரனுமாகிய இயேசுவை விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே நரகத்திற்கு விலக்கப்பட்டு நித்திய வாழ்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

வேதாகமத்தை எழுதியது யார்?

தேவனுடைய பரிசுத்த ஆவியானவரே இதனை சுமார் 1600 ஆண்டுகளாக எழுதினார். அப்படி எழுதுவதற்கு சுமார் 40 பேரைத் தெரிந்துகொண்டு, அவர்களைப் பரிசுத்தப்படுத்தி நமக்காக எழுதி வைத்துள்ளார். நாம் அன்றாட வாழ்வில் எத்தனையோ புத்தகங்களை வாசிக்கிறோம். அவைகளை எழுதியவர்கள் மரித்தவர்களாகவோ, நம்மைவிட்டுத் தூரத்தில் வசிப்பவர்களாகவோ இருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமத்தை எழுதிய ஆசிரியராகிய தேவ ஆவியானவர் மட்டும், அதை வாசிப்பவர்களின் அருகிலும் இருக்கிறார்.

மேலும் அந்த வசனங்களில் அவர் நிரம்பியிருந்து, வாசிக்கிறவர்களுக்குள்ளே வந்துவிடுகிறார்.

வேதாகம பகுதிகளின் வடிவம் எப்படியிருக்கிறது?

ஒவ்வொரு புத்தகத்திற்கும் குறிப்பிட்ட பெயரிடப்பட்டு, அது அதிகாரங்களாகவும், வசனங்களாகவும் பிரிக்கப்பட்டு எண்ணிடப்பட்டுள்ளது.

வேத பகுதிகளைச் சுட்டிக்காட்ட அது அமைந்துள்ள புத்தகத்தின் பெயரையும் (அல்லது பெயரின் முதல் எழுத்துக்களையும்) அதிகார எண், வசன எண் ஆகியவற்றையும் குறிப்பிடுவார்கள். யோ 3 : 6 என்று குறிப்பிட்டால் யோவான் எழுதின சுவிசேஷம் என்ற புத்தகத்தின் மூன்றாவது அதிகாரத்தின் ஆறாவது வசனத்தைக் குறிப்பிடுகிறோம். உலகம் முழுவதும் எல்லா பாஷைகளிலும் இது பொருந்தும்.

<u>பரிசுத்த வேதாகமத்தின் மகத்துவங்கள்:</u>

பரிசுத்த வேதாகமம் அதன் மூலபாஷைகளான எபிரேயு, கிரேக்கு. இலத்தீன் ஆகிய மொழிகளிலிருந்து உலகிலேய அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதும் முதன்முதலில் பரிசுத்த வேதாகமத்தின் பகுதிகளே அச்சடிக்கப்பட்டது. உலகிலேயே இன்றுவரை அதிக எண்ணிக்கையில் அச்சிடப்பட்ட புத்தகமும் பரிசுத்த வேதாகமமே. பரிசுத்த வேதாகமம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து சாட்சியிடுகிறது.

பொதுவாக நாம் வாசிக்கும் புத்தங்களில் சில உண்மைகள் இருக்கும். சில பொய்கள், தீமைகள், எழுதுகிறவர்களின் அறியாமைகள், பிற்காலங்களில் தவறானதென்று கண்டுபிடிக்கப்படும் பகுதிகள் ஆகியவையும் இருக்கும். பரிசுத்த வேதாகமத்தின் முதல் எழுத்துத் துவங்கி, கடைசி எழுத்து முடிய சத்தியமானது. இதன் ஒரு எழுத்தையாவது, வார்த்தையையாவது தவறானதென எவராலும் கூறமுடியாது. அப்படி தவறானதென்று இதுவரை நிரூபிக்கப்படவுமில்லை. என்றென்றும் இது சத்தியமனாது.

பரிசுத்த வேதாகமத்தின் ஒரே நோக்கம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை நாம் விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பாகிய ரட்சிப்பைப்பெற்று. பரலோகத்தை அடையவேண்டும் என்பதாகும் (யோவா 20 : 31) என்பதை மீண்டும் நினைவில் கொள்க.

இந்தியாவுக்கு இந்த வேதாகமம் எப்போது கிடைத்தது?

பொதுவாக இந்தியர்களுக்கு பலவித அறிவியல் கண்டுபிடிப்புகளும், வசதிகளும் தாமதமாகவே கிடைத்துவந்துள்ளது. அதற்குக் காரணம் அவர்கள் உலகத்தோடு அதிகம் தொடர்புகொள்ளாதிருந்ததும், சாத்தானின் வஞ்சகத்தின்படியே நாளதுவரை பலவித மூடநம்பிக்கைகளில் சிக்கிக்கொண்டிருப்பதுமாகும்.

இந்தியர்கள் பல தலைமுறைகளாக விக்கிரக ஆராதனையிலும். இன்னதென்று அறியாமல் எதையும் வணங்கியும், சில நல்ல கருத்துக்களை விளக்குவதற்காக எழுதப்பட்ட கதைகளை உண்மையென நம்பியும் வாழ்ந்துவந்தனர். ஆன்மாவைக்குறித்து சிறுபான்மைக் குழுக்கள்

சொன்ன எதையும் வேதமென்று எண்ணிவந்தனர். இது தேவனுடைய வெளிப்பாடா, சரித்திரமா, உண்மையா, பொய்யா என்றெல்லாம் எதைக்குறித்தும் அவர்கள் கேள்விகேட்டு அதிகமாக சிந்தித்ததில்லை. இயேசு பிறந்த முதல் நூற்றாண்டில் அவருடைய சீசர்களில் ஒருவராகிய புனித தோமா (Saint Thomas) என்பவர் இந்தியாவிற்கு சுவிசேஷ ஒளியைக் கொண்டுவந்தார். அன்றுமுதல் இந்திய மொழிகள் பலவற்றில் பரிசுத்த வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டு, சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில்தான் முழுமையான தமிழ் வேதாகமம் நமக்குக் கிடைத்தது. இன்னும் அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் பணி நடந்து வருகிறது.

இன்று ஒரு தமிழ் வேதாகமத்தின் விலை ரூ 50- ஆகும். இதன் ஒரு பகுதியான புதிய ஏற்பாடு உங்களுக்கு வேண்டுமானால் அருகிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். விசுவாசத்துடன் கற்றுக்கொள்ள ஆர்வமிருந்தும் முழு வேதாகமத்தையும் விலைக்கு வாங்க பொருள் வசதியில்லாதவர்கள் விஷ்வவாணி, த.பெ. 34, பாளையங்கோட்டை. திருநெல்வேலி என்ற முகவரிக்கு எழுதினால் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வீட்டிலும் கண்டிப்பாக ஒரு வேதாகமமாவது இருப்பது அவசியம்.

<u>இரட்சிக்கப்பட்ட நமக்கு வேதாகமத்தின் பயன்கள்</u> -

1. அன்றாட உணவு மனிதனுக்கு சரீர பலத்தைத் தருவதுபோல், பரிசுத்த வேதாகமம் ஆவிக்குரிய ஆகாரமாயிருந்து. ஆன்ம பலமளிக்கிறது.

2. பொதுவாக இசை, குடி, வெறி, விபச்சாரம், பொருள்வரவு போன்ற அழிந்துபோகும் உலகியல் சந்தோஷங்களைவிட, நிறைவான மெய்சந்தோஷத்தையும், சமாதானத்தையும், பரிசுத்த வேதாகமம் தருகிறது.

3. தினசரி பாவத்தில் விழுந்துவிடாதபடி எச்சரித்துக் காப்பதும். தேவனுடைய பிரசன்னத்தைக் கொண்டுவருவதும் பரிசுத்த வேதாகமமேயாகும்.

4. கர்த்தருடைய வேதம் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப்போன்றது. அதனைக்கொண்டு

சாத்தானையும், அவனுடைய உலக மாயைகளையும் வேரறுக்கலாம்.

5. இக்கட்டான உலக சூழ்நிலைகளில் நாம் துயரடையும்போது, நம்மைத் தேற்றி, ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்கிறது. அதனால் புதிய பலத்தோடு நாம் சூழ்நிலைகளை வென்றுவிடுகிறோம்.

பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்போது கீழ்க்கண்டவற்றை மனதில் கொள்ளவேண்டும்.

1. இந்த வேதத்தை எழுதிய பரிசுத்த ஆவியானவர், இதை வாசிக்கும் என்னருகில் இருக்கிறார்.

2. நான் இரட்சிக்கப்பட்டு அவருடைய ராஜ்யத்தில் சேரவேண்டும் என்பதற்காகவே தேவன் இதனை எனக்கு அருளியிருக்கிறார்.

3. பரிசுத்த வேதாகமத்தின் முதல் எழுத்துத் துவங்கி, இறுதி எழுத்துவரை சத்தியமானது. ஆகையால் அதனை எவ்விதத்திலும் சந்தேகிக்கக் கூடாது.

4. வேதம் நமது ஆன்மாவிற்கான ஞானப்பால். சிறு குழந்தையைப்போல் அதை நம்பும்போது, தேவன் அதனைப் புதுவிதங்களில் விளக்கிக்காட்டுகிறார். புரிந்துகொள்ள சிரமமான பகுதிகளை மீண்டும் மீண்டும் வாசிப்பதன் மூலமும், ஜெபத்தின் மூலமும் விளங்கிக்கொள்வோம். வேதத்தினை எழுதிய தேவ ஆவியானவர் ஒருவரே அதனை விளக்கிக்காட்டவும் வல்லவர். பரிசுத்த ஆவியால் நிறைந்த பக்தர்கள் எழுதிய விளக்கப் புத்தகங்கள், சிறந்த பிரசங்கங்கள், ஊரியர்கள் அளிக்கும் விளக்கங்கள் ஆகியவையும் பரிசுத்த வேதாகமத்தை நாம் அதிகமாகப் புரிந்துகொள்ள உதவும்.

அன்பார்ந்த சகோதரர்களே! தித்திக்கும் தேனைவிட நமது சிந்தனைக்குச் சுவையானதும், களங்கமில்லாத ஞானப்பாலுமாகிய இந்த வேதத்தை தினமும் ஆவலுடன் வாசியுங்கள்.

நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் தினமும் வளருங்கள் உதவும். கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு.

ஜெபமும். வேதவாசிப்புமாகிய இரண்டு இறக்கைகளைக்கொண்டு நீங்கள் ஆன்மீக வார்வில் மேலும் மேலும் உயர்ந்துசெல்ல எங்கள் நல்வாழ்த்துக்கள். ஆன்மீக வானில் உயர்ந்துகொண்டே செல்லும்போது தேவன் பெரியவராகவும். உலகமும் அதில் உள்ளவைகளும் சிறிதாகவும்

தெரியும்.

தேவன் உங்களுக்கு நல்ல பாக்கியங்களை அருள்வாராக!

**கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளியுங்கள்**

1) **ஜெபிக்கத் தெரியாதவர்கள் எப்படி ஜெபிக்க முடியும்?**

2) **விக்கிரகங்களுக்குமுன்னால் ஜெபிக்கக் கூடாது, ஏன்?**

3) **உங்கள் வாழ்வில் ஜெபத்தினால் நீங்கள் பெற்ற பயன் ஒன்றை நினைவுகூருங்கள்.**

4) **பரிசுத்த வேதாகமத்தின் பெருமைகளில் உங்களை அதிகம் கவர்ந்தது எது?**

5) **தேவன் பரிசுத்த வேதாகமத்தை நமக்கு வழங்கியிருக்காவிட்டால் எப்படியிருந்திருக்கும்?**

6) **பரிசுத்த வேதாகமத்தை எழுதிய ஆசிரியர் யார்? அவர் எவ்வகையில் மற்றப் புத்தகங்களை எழுதியவர்களிடமிருந்து வேறுபட்டவர்?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.